# தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (01.10.2016 முதல் 05.10.2016)

**அறிக்கைஎண் :079/2016** **தேதி: 30.09.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை: கோயமுத்தூர் (01.10.2016 முதல் 05.10.2016)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே காணப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24 °செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 73 முதல் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60 முதல் 67 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01.10.16 | 0 | 33 | 23 | 5 | 80 | 67 | 15 | தெற்கு |
| 02.10.16 | 0 | 33 | 23 | 5 | 80 | 67 | 15 | தெற்கு |
| 03.10.16 | 0 | 33 | 24 | 4 | 73 | 60 | 15 | தெற்கு |
| 04.10.16 | 0 | 33 | 24 | 4 | 73 | 60 | 15 | தெற்கு |
| 05.10.16 | 0 | 33 | 24 | 4 | 73 | 60 | 15 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- சம்பா பருவம் முடிவடைந்து விட்டதால் சம்பா நெற்பயிருக்காக நாற்றாங்கால் விதைப்பு மற்றும் நேரடி விதைப்பு செய்யவதை நிறுத்தவும்.
- திராட்சை பயிரில், அதிக காற்றின் ஈரப்பதம் மற்றும் பூஞ்சாண நோய்க்கு சாதகமான வெப்பநிலை நிலவுவதால் அடிச்சாம்பல் நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது. எனவே காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்து 0.25 சதவீதத்தினை 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும்.
- 120 நாட்கள் வயதான மஞ்சள் பயிரில் மேலுரமாக ஹெக்டருக்கு 55 கிலோ யூரியா மற்றும் 30 கிலோ பொட்டாஷ் இடவும்.

**குறுஞ்செய்தி**


- 120 நாட்கள் வயதான மஞ்சள் பயிரில் மேலுரமாக ஹெக்டருக்கு 55 கிலோ யூரியா மற்றும் 30 கிலோ பொட்டாஷ் இடவும்.



பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.